**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.I, திண்டிவனம்,**

**முன்னிலை: ஸ்ரீமதி. ம. இளவரசி M.L.,**

**நீதித்துறை நடுவர் எண். I திண்டிவனம்.**

**2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 16 -ம் நாள் திங்கள்கிழமை**

**2056 திருவள்ளுவராண்டு விசுவாவசு வருடம் பங்குனி திங்கள் 02-ம் நாள்**

**CC. No.212 of 2025**

**(CNR No.TNVP10-00846-2025)**

| | | | |
|---|---|---|---|
| 1) | வழக்கு எண் | : | C.C.No.212/2025 |
| 2 | குற்ற முறையீடுபவர் | : | தமிழ்நாடு அரசு அதன் சார்பாக<br>காவல் உதவி ஆய்வாளர்,<br>ரோஷணை காவல் நிலையம்,<br>குற்ற எண். 260/2023,<br>இதச பிரிவுகள் 294(b), 323, 324, 506(2) |
| 3 | எதிரிகளின் விவரம் | | 1. அலெக்சாண்டர், வயது 41,<br>த/பெ ஆறுமுகம்,<br>மாரியம்மன் கோயில் வீதி,<br>மேல்பேரடிக்குப்பம் கிராமம்,<br>தீவனூர் அஞ்சல்,<br>திண்டிவனம் வட்டம். |
| | | | 2. குமரேசன், வயது 48,<br>த/பெ ஆறுமுகம்,<br>மாரியம்மன் கோயில் வீதி,<br>மேல்பேரடிக்குப்பம் கிராமம்,<br>தீவனூர் அஞ்சல்,<br>திண்டிவனம் வட்டம். |
| 4 | சம்பவ தேதி | : | 03.07.2023 |

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.03.16 17:25:02 +0530

<table>
<tr><td>5</td><td>முறையீடு</td><td>:</td><td colspan="3">04.07.2023</td></tr>
<tr><td>6</td><td>எதிரிகள் நீதிமன்ற காவலில் இருந்த நாள்</td><td>:</td><td colspan="3">04.07.2023 to 10.07.2023</td></tr>
<tr><td>7</td><td>குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள்</td><td>:</td><td colspan="3">19.05.2025</td></tr>
<tr><td>8</td><td>குற்றச்சாட்டு வனையப்பட்ட நாள்</td><td>:</td><td colspan="3">07.06.2026</td></tr>
<tr><td>9</td><td>தாக்கல் செய்யப்பட்ட குற்ற பல்வகை மனுக்களின் விவரம்</td><td>:</td><td colspan="3">----</td></tr>
<tr><td rowspan="4">10</td><td rowspan="4">சாட்சிகளின் விசாரணை</td><td rowspan="4">:</td><td>Witness</td><td>Date of Chief</td><td>Date of Cross</td></tr>
<tr><td>PW-1</td><td>06.03.2026</td><td>06.03.2026</td></tr>
<tr><td>PW-2</td><td>06.03.2026</td><td>06.03.2026</td></tr>
<tr><td>PW-3</td><td>06.03.2026</td><td>06.03.2026</td></tr>
<tr><td></td><td></td><td></td><td>PW-4</td><td>09.03.2026</td><td>09.03.2026</td></tr>
<tr><td></td><td></td><td></td><td>PW-5</td><td>11.03.2026</td><td>11.03.2026</td></tr>
<tr><td>11</td><td>பிரிவு 351(1)(பி) BNSS ன் கீழ் எதிரியிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள்</td><td>:</td><td colspan="3">12.03.2026</td></tr>
<tr><td>12</td><td>எதிரிகள் தலைமறைவு காலம் பற்றிய விவரம்</td><td>:</td><td colspan="3">இல்லை</td></tr>
<tr><td>13</td><td>மேல்முறையீடு நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால தடை உத்தரவு பற்றிய விவரங்கள்</td><td>:</td><td colspan="3">இல்லை</td></tr>
</table>

ELAVARASI

Digitally signed by ELAVARASI
Date: 2026.03.16 17:25:20 +0530

| | | | |
|---|---|---|---|
| 14 | தண்டனை அல்லது உத்தரவு | : | 1வது எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 323, 324, 506(ii) , 2வது எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 323, 506(ii) ன் கீழான குற்றமானது அரசு தரப்பு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படாததால் எதிரிகள் குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து பிரிவு 271(1) BNSS- ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. |
| 15 | காலதாமதத்தின் விளக்கம் | : | ___ |

இவ்வழக்கானது கடந்த 19.05.2025-ம் தேதி இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு, இந்த வழக்கானது இந்நீதிமன்றத்தில் 11.03.2026-ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்த போது, அரசு தரப்பில் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை 2 அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.மணிவண்ணன், B.A., L.L.B., அவர்கள் ஆஜராகியும், விசாரணைக்கு வரப்பெற்று இருதரப்பு வாதம் கேட்கப்பட்டு பின்பு வழக்கு ஆவணங்களையும் பரிசீலக்கப்பட்டு இன்று இந்நீதிமன்றத்தில் வழங்கும்.,

## தீர்ப்புரை

### 1) குற்ற அறிக்கையின் சுருக்கம்:-

ரோஷணை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட மேல்பேரடிக்குப்பம் கிராமத்தில் முனியாண்டி என்பவர் இறந்துவிட்டதால் அவரது இறுதி சடங்கில் கலந்து கொள்வதற்காக இவ்வழக்கின் வாதியான பெருமாள் என்பவர் குடும்பத்துடன் 03.07.2023 ம் தேதி இரவு 19.00 மணிக்கு இறுதி ஊர்வலத்துடன் மேல்பேரடிக்குப்பம்

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.03.16 17:25:31 +0530

மாரியம்மன் கோயில் அருகே செல்லும்போது எதிரிகள் இருவரும் டேன்ஸ் போட்டுக் கொண்டு சவ ஊர்வலம் செல்லவிடுங்கள் என்று சொன்னபோது 2 வது எதிரியானவர் பெருமாள் என்பவரை பார்த்து ஏய் தேவிடியா பையா நீ என்ன பெரிய பூலா என்று ஆபாசமாக திட்டி கையால் ஓங்கி கன்னத்தில் அடித்தார் எனவும், இதை பார்த்த சாட்சி -1 ன் மகனான நவீன் என்பவர் மறிக்க சென்றபோது 1வது எதிரியானவர் கையால் பிடித்து தள்ளிவிட்டபோது மாரியம்மன் கோயிலில் இருந்த சூலத்தின் மீது நவீன் என்பவரின் இடது கை பட்டதில் அவருக்கு சொற்ப காயத்தை ஏற்படுத்தியும், பின்னர் எதிரிகள் இருவரும் சேர்ந்து கொண்டு அவர்கள் கையில் வைத்திருந்த கத்தியை காட்டி இனி நீங்கள் இந்த ஊருக்கு வந்தீங்கன்னா உன்னையும், உன் மகனையும் கொலை செய்து விடுவோம் என கொலை மிரட்டல் விடுத்து குற்றம் புரிந்ததாக 1வது எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 323, 324, 506(2)-ன்படியும், 2 வது எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 323, 506(2)- ன்படி ரோஷணை காவல் உதவி ஆய்வாளர் அவர்களால் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) இந்நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்ட இவ்வழக்கானது 1வது எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 323, 324, 506(2)- ன்படியும், 2 வது எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 323, 506(2)- ன் கீழ் விசாரணைக்கு எடுக்கப்பட்டு எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.03.16 17:25:37 +0530

3) எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜரான போது வழக்கு ஆவணங்களின் நகல்கள் பிரிவு 230-BNSS-ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

**4)** வழக்கின் ஆவணங்களை பரிசீலனை செய்ததில் எதிரிகள் மீது குற்றச்சாட்டு வினவுவதற்கு போதுமான முகாந்திரம் இருந்ததால் 1வது எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 323, 324, 506(2)- ன்படியும், 2 வது எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 323, 506(2)-ன் கீழான குற்றச்சாட்டுகள் குறித்து வனைந்து விளக்கி கூறி வினவிய போது எதிரிகள் அவற்றை மறுத்து தாங்கள் குற்றவாளிகள் இல்லை என்று கூறியதால் அரசு தரப்பில் சாட்சி விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

5) இந்த வழக்கில் அரசுத்தரப்பில் அ.சா. 1 முதல் அ.சா. 5 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்கள் முன்னிடப்பட்டுள்ளது. எதிரி தரப்பில் சாட்சியம் அளிக்கப்படவில்லை.

**6) வழக்கின் சுருக்கம்**

- நிகழ்நிலை புகார்தாரரான அ.சா.1 சம்பவம் பற்றியும் புகார் அளித்தது பற்றியும் சாட்சியம் அளித்துள்ளார்.
- பார்வை மகசர் சாட்சிகளாக முன்னிலைப்படுத்தப்பட்ட அ.சா.2, அ.சா.3 ஆகியோர் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவளிக்காமல் சாட்சியம் அளித்துள்ளனர் .

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.03.16 17:25:42 +0530

- ➔ கண்ணுற்ற சாட்சியான அ.சா.4 யாரோ தன்னை தள்ளிவிட்டதால் தனக்கு கையில் அடிபட்டது என அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவளிக்காமல் சாட்சியம் அளித்துள்ளார் .
- ➔ காவல் உதவி ஆய்வாளர் அ.சா.5 வழக்கின் புலன் விசாரணை பற்றி சாட்சியம் அளித்துள்ளார்.

7). அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்து எதிரிகளை பாதிக்கக்கூடிய அம்சங்கள் குறித்து எதிரிகளிடம் பிரிவு 351(1)(ஆ)-ன் BNSS படி வினவியபோது எதிரி பொய் சாட்சி என்றும், பொய் வழக்கு என்றும், தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று தெரிவித்தனர். எனவே, எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

8) **<u>தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை:-</u>**

**இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில் 1வது எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 323, 324, 506(2)- ன்படியும், 2 வது எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 323, 506(2)- ன் கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.**

9. இருதரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு கோப்பு மற்றும் சாட்சியங்கள் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

10. அரசு தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் சாட்சிகள் அ.சா.1 முதல் அ.சா.5 சான்றாவணங்கள் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரையிலான சாட்சிகள் மூலமாக எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.03.16 17:25:49 +0530

நிரூபணம் செய்யப்பட்டதால் தக்க தண்டனை வழங்குமாறு வாதிட்டார்.

11. எதிரிகள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் அ.சா.1 மற்றும் காயம்பட்ட அ.சா.4 ஆகியோர் முரண்பட சாட்சியம் அளித்துள்ளார். மற்ற சாட்சிகள் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவளிக்காமல் பிறழ் சாட்சியம் அளித்துள்ளனர். எனவே சந்தேகத்தின் பலனை அளித்து எதிரிகளை குற்றவாளிகள் அல்ல என தீர்மானித்து விடுதலை செய்யுமாறு வாதிட்டார்.

**12) சாட்சிய பரிசீலனைகளும், தீர்வும் ;**

நிகழ்நிலை புகார்தாரரான **அ.சா.1 திரு.பெருமாள்** அவரது சாட்சியத்தில் சுமார் 2 வருடத்திற்கு முன்னர் தனது தங்கை அமுலுவின் கணவர் இறந்துவிட்டதால் அவரின் இறப்பு நிகழ்ச்சிக்காக மேல்பேரடிக்குப்பம் சென்றிருந்ததாகவும், அப்போது மழை வந்ததால் சவ ஊர்வலம் காலதாமதமாக எடுத்து வந்ததாகவும், அதனை ஊரில் இருந்தவர்கள் கேட்டு வாக்குவாதம் ஏற்பட்டு தனது மகனை தள்ளிவிட்டுவிட்டார்கள் எனவும், அதில் தனது மகனுக்கு இரத்த காயம் ஏற்பட்டது எனவும், தனது தம்பி ஏழுமலைக்கு தலையில் அடிபட்டதாகவும், பின்னர் அடிபட்ட தனது மகன், தம்பி ஆகியோர்களை திண்டிவனம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாகவும், சம்பவம் குறித்து காவல் நிலையத்திற்கு சென்றபோது அங்கு போலீசார் தன்னிடம் கையொப்பம் பெற்றதாகவும், புகார் மனுவில் உள்ள விவரம் தெரியாது எனவும், போலீசார் வழக்கு சம்மந்தமாக விசாரிக்கவில்லை என

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.03.16 17:26:00 +0530

அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவளிக்காமல் சாட்சியம் அளித்துள்ளார்.

14.பார்வை மகசர் சாட்சியாக முன்னிலைப்படுத்தப்பட்ட **அ.சா.2 திருமதி.ஜெயலட்சுமி** அவரது சாட்சியத்தில் பார்வை மகசரில் உள்ள 2வது கையொப்பம் தன்னுடையதுதான் எனவும், சுமார் 2 வருடத்திற்குமுன்னதாக ஒரு நாள் மாலை 7 மணிக்கு தான் ரவுண்டானாவில் நின்றிந்தபோது அங்கு நடந்த சண்டை சம்மந்தமாக போலீசார் தன்னிடம் கையொப்பம் பெற்றதாகவும், இந்த வழக்கு சம்மந்தமாக தனக்கு எதுவும் தெரியாது எனவும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை எனவும் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவளிக்காமல் சாட்சியம் அளித்துள்ளார்.

15. மற்றொரு பார்வை மகசர் சாட்சியாக முன்னிலைப்படுத்தப்பட்ட **அ.சா.3 திரு முனியன்** அவரது சாட்சியத்தில் பார்வை மகசரில் உள்ள 1வது கையொப்பம் தன்னுடையதுதான் எனவும், சுமார் 2 வருடத்திற்கு முன்னதாக ஒரு நாள் தான் தனது சொந்த வேலையாக ரோஷணை காவல் நிலையம் சென்றபோது அங்கு தன்னிடம் மேற்படி கையொப்பம் பெற்றதாகவும், இந்த வழக்கு சம்மந்தமாக எதுவும் தனக்கு தெரியாது எனவும் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவளிக்காமல் சாட்சியம் அளித்துள்ளார்.

16. காயம்பட்ட மற்றும் கண்ணுற்ற சாட்சியான **அ.சா.4 திரு.நவீன்** அவரது

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.03.16 17:26:11 +0530

சாட்சியத்தில் சுமார் 2 வருடத்திற்கு முன்னதாக ஒரு நாள் தனது அத்தையின் கணவர் இறந்துவிட்டதால் மேல்பேரடிக்குப்பம் கிராமத்திற்கு தானும், தனது அப்பா, அம்மா ஆகியோர்கள் சென்றதாகவும், ஊரிலிருந்த சிவன் கோயில் அருகே தள்ளுமுள்ளு ஏற்பட்டதாகவும், அதில் யாரோ தன்னை கீழே தள்ளிவிட்டார்கள் எனவும், அதில் தனது இடது கையில் அடிபட்டதாகவும், பின்னர் ஆம்புலன்ஸ் மூலம் திண்டிவனம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள் எனவும், சம்பவம் சம்மந்தமாக போலீசார் தன்னை விசாரிக்கவில்லை எனவும் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவளிக்காமல் சாட்சியம் அளித்துள்ளார்.

17. **இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி அ.சா.5 திரு. சசிகுமார் காவல் உதவி ஆய்வாளர்** அவரது சாட்சியத்தில் கடந்த 04.07.2023 அன்று ரோஷணை காவல் நிலையத்திலிருந்தபோது காலை 10.30 மணிக்கு சிறப்பு உதவி ஆய்வாளர் பலராமன் நிலைய பொறுப்பில் இருந்தபோது அ.சா.1 பெருமாள் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரினை பெற்று நிலைய குற்ற எண்.260/2023 இதச பிரிவுகள் 294(b), 323, 324, 506(2) ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார் எனவும், பின்னர் வழக்கினை தனது விசாரணைக்கு வைக்கட்டதை தான் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகள் முனியன் மற்றும் ஜெயலட்சுமி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார் எனவும், பின்னர் வழக்கின் சம்பவ சாட்சிகளான பெருமாள், நவீன், ஸ்ரீபிரியா, ஏழுமலை, முனுசாமி ஆகியோர்களை தனித்தனியாக

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.03.16 17:26:20 +0530

விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார் எனவும், சாட்சிகளின் விசாரணையிலிருந்து சம்பவம் உண்மை என தெரிய வர எதிரிகளை தேட எதிரிகள் அலெக்காண்டர், குமரேசன் ஆகியோர்கள் அன்றைய தினம் 15.00 மணிக்கு மேல்பேரடிக்குப்பம் கிராம சுடுகாடு அருகில் நின்றிருந்தவர்களை அடையாளம் கண்டு காரணம் கூறி கைது செய்து காவல் நிலையம் அழைத்து வந்து திரேக பரிசோதனைக்கு பின் நீதிமன்ற காவலுக்கு ஒப்படைத்தார் எனவும், பின்னர் வழக்கில் காயம்பட்ட நவீன் என்பவருக்கு மருத்துவ சிகிச்சை அளித்த உதவி மருத்துவர் சுரேஷ்குமார் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பெற்று காயச்சான்று பெற்றார் எனவும், பின்னர் முதல் தகவல் அறிக்கை பதிவு சிறப்பு உதவி ஆய்வாளர் பலராமன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார் எனவும், பின்னர் வழக்கின் விசாரணையை முடித்து எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(b), 323, 324, 506(2) ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தார் எனவும் கூறியுள்ளார். எதிரிகள் தரப்பில் அ.சா.5 புலன் விசாரணை அதிகாரி குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார்.

18. கடந்த 03.07.2023 ம் தேதி இரவு 19.00 மணிக்கு இறுதி ஊர்வலத்துடன் செல்லும்போது எதிரிகள் இருவரும் டேன்ஸ் போட்டுக் கொண்டு சவ ஊர்வலம் செல்லவிடுங்கள் என்று சொன்னபோது 2 வது எதிரியானவர் அ.சா.1 பெருமாள் என்பவரை பார்த்து ஆபாசமாக திட்டி கையால் கன்னத்தில் அடித்ததை பார்த்த சாட்சி -1 ன் மகனான நவீன் என்பவர் மறிக்க சென்றபோது 1 வது எதிரியானவர்

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.03.16 17:26:26 +0530

கையால் பிடித்து தள்ளிவிட்டபோது மாரியம்மன் கோயிலில் இருந்த சூலத்தின் மீது நவீன் என்பவரின் இடது கை பட்டதில் அவருக்கு சொற்ப காயத்தை ஏற்படுத்தி கொலை மிரட்டல் விடுத்ததாக அரசு தரப்பு வழக்காகும்.

19. பாதிக்கப்பட்ட சாட்சிகளான அ.சா.1, அ.சா.4 ஆகியோர் காயம்பட்டது பற்றி சாட்சியமளித்த போதிலும் யார் அடித்தார்கள் என தெரியாது என அரசு தரப்பு வழக்கிற்கு முரண்பட சாட்சியளித்துள்ளனர். பார்வை மகசர் சாட்சிகளான அ.சா.2, அ.சா.3 ஆகியோர் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவளிக்காமல் சாட்சியம் அளித்துள்ளனர். புகாரில் எதிரிகளின் பெயரை குறிப்பிட்டுள்ள நிலையில், சம்பவ இட சாட்சிகள் எதிரிகளுக்கு எதிராக எவ்வித சாட்சியமும் முன்னிடப்படவில்லை. காவல் உதவி ஆய்வாளர் அ.சா.5 வழக்கின் புலன் விசாரணை பற்றி சாட்சியம் அளித்துள்ளார். எனவே மேற்படி சாட்சிகளில் 2 வது எதிரியானவர் பெருமாள் என்பவரை பார்த்து அசிங்கமாக திட்டி கன்னத்தில் அடித்ததாகவோ, அ.சா.4 நவீன் என்பரை கீழே பிடித்து தள்ளி சூலத்தின் மீது விழுந்து இடது கை பட்டதில் அவருக்கு சொற்ப காயத்தை ஏற்படுத்தியதாகவோ, எதிரிகள் இருவரும் கத்தியை காட்டி கொலை மிரட்டல் விடுத்ததான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

20. அரசு தரப்பு சாட்சியங்கள் அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகள் மற்றும்

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.03.16 17:26:34 +0530

அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்கள்படியாக 1வது எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 323, 324, 506(ii) , 2 வது எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 323, 506(ii) ன் கீழான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு இடமற்ற வகையில் நிரூபணம் செய்யப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

**21. இறுதியாக, 1 வது எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 323, 324, 506(ii) , 2 வது எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 323, 506(ii) ன் கீழான குற்றமானது அரசு தரப்பு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படாததால் எதிரிகள் குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து பிரிவு 271(1) BNSS- ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.**

22. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை. எதிரி எழுதிக்கொடுத்த பிணைப்பத்திரம் அது இதன் மூலம் ரத்து செய்யப்படுகிறது.

என்னால் இத்தீர்ப்புரை சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக கனினயில் சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 16 -ம் திங்கள்கிழமை 2026-ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்து.

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.03.16 17:26:42 +0530

நீதித்துறை நடுவர் எண். I,
திண்டிவனம்.

**இணைப்பு:-**

**அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்:-**

| | | |
|---|---|---|
| அ.சா.1 | திரு.பெருமாள் | நிகழ்நிலை புகார்தாரர் |

| | | |
|---|---|---|
| அ.சா.2 | திருமதி.ஜெயலட்சுமி | பார்வை மகசர் சாட்சி |
| அ.சா.3 | திரு.முனியன் | பார்வை மகசர் சாட்சி |
| அ.சா.4 | திரு.நவீன் | பாதிக்கப்பட்ட சாட்சி |
| அ.சா.5 | திரு.சசிக்குமார் காவல் உதவி ஆய்வாளர் | விசாரணை அதிகாரி |

**அரசு தரப்பில் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்**:-

| அ.சா.ஆ. எண்கள். | தேதி | ஆவணங்களின் விபரம் | ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்ட சாட்சிகள் |
|---|---|---|---|
| அ.சா.ஆ.1 | ---- | பார்வை மகசரில் உள்ள அ.சா.2 ன் கையொப்பம் | அ.சா. 2 |
| அ.சா.ஆ.2 | ---- | பார்வை மகசரில் உள்ள அ.சா.3 ன் கையொப்பம் | அ.சா. 3 |
| அ.சா.ஆ.3 | 04.07.2023 | புகார் மனு | அ.சா.5 |
| அ.சா.ஆ.4 | 04.07.2023 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.5 |
| அ.சா.ஆ.5 | 04.07.2023 | பார்வை மகசர் | அ.சா.5 |
| அ.சா.ஆ.6 | 04.07.2023 | மாதிரி வரைபடம் | அ.சா.5 |
| அ.சா.ஆ.7 | 03.07.2023 | அ.சா.2 ன் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று | அ.சா.5 |

**அரசு தரப்பில் குறியிடப்பட்ட சான்றுப்பொருட்கள்**:- இல்லை

**எதிரிகள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்**:-இல்லை

ELAVARASI Digitally signed by ELAVARASI Date: 2026.03.16 17:26:49 +0530

நீதித்துறை நடுவர் எண். I,

திண்டிவனம்.